2020-21-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட (பக்கங்களின் எண்ணிக்கை : 2)

மாணவ-மாணவியருக்கு மட்டும்) SUBJECT CODE 20 UTM 4A5

REG.NO:

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி), பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : ஜீலை - 2022**

**பி.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 70**

**நான்காம் பருவம்** **நேரம் : 3 மணி**

**பகுதி – III**

**Allied – IV - கோயிற்கலைகள**

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. கட்டடக்கலை நூலை அறிந்தவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
   அ) யாப்பறி புலவர் ஆ) நூலறி புலவர்
   இ) கண்ணுள் வினைஞர் ஈ) மண்ணீட்டாளர்
2. கருங்கற்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்படுவது எது?
   அ) குடைவரை ஆ) மண்தளி
   இ) கற்றளி ஈ) ஒற்றைக்கல் கோயில்
3. ‘பஞ்சமரபு’ என்னும் இசை நூலின் ஆசிரியர் யார்?
   அ) அறிவனார் ஆ) நாரதர்
   இ) வாய்ப்பியனார் ஈ) குலோததுங்கன்
4. சுந்தரர் பதிகம் பாடி முதலையுண்ட பாலனை மீட்ட தலம் எது?
   அ) பவானி ஆ) கொடுமுடி
   இ) கருவூர் ஈ) அவிநாசி
5. ‘இருக்’ என்ற சொல்லின் பொருளைக் கண்டறிக.
   அ) துதித்தல் ஆ) இன்னிசை
   இ) யாகம் ஈ) கிரியை

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக.** **(K2)**

6. அதிட்டானத்தின் இரண்டு வகைகளைச் சுட்டுக.
7. கோட்டப் பஞ்சரம் என்றால் என்ன?
8. அல்லியம் என்ற கூத்தின் விளக்கம் யாது?
9. கொங்கேழ் தலங்களில் எவையேனும் இரண்டன் பெயரைக் குறிப்பிடுக.
10. ஆகமம் என்ற சொல்லின் பொருள் யாது?

(த.பி.பா.)

**பகுதி – ஆ** (5x 4=20 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.**

**(K3)**

11. அ) பல்லவர் காலக் குடைவரைக் கோயில்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) செப்புத் திருமேனிகள் செய்யும் கலையில் பின்பற்றப்படும் தேன்மெழுக்கு முறை குறித்து எடுத்துரைக்க.

12. அ) மூன்று வகை விமானங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) பரங்குன்றத்துச் சுவர் ஓவியத்தின் சிறப்பைப் புலப்படுத்துக.

13. அ) இசைக்கலை வளர்ச்சியில் சமணர்களின் பங்களிப்பைச் சுட்டுக.

(அல்லது)

ஆ) தலைக்கோல் என்றால் என்ன? அதன் சிறப்பு யாது?

14. அ) காரமடை அரங்கநாதர் திருக்கோயிலின் வரலாற்றை எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ) ஆனைமலை மாசாணியம்மன் குறித்து சங்க இலக்கியம் குறிப்பிடுவதைச் சுட்டுக.

15. அ) நால்வகை வேதங்கள் பற்றிக் குறிப்பெழுதுக.

(அல்லது)

ஆ) வைண ஆகமங்கள் யாவை?

**பகுதி – இ** (4x 10=40 மதிப்பெண்கள்)

**பின்வரும் வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு மட்டும் விரிவாக விடையளிக்க. வினா எண். 16க்குக் கண்டிப்பாக விடையளிக்கவும். (K4 & K5)**

16. கோயில்கள் அமைய வேண்டிய இலக்கணத்தை விவரிக்க.
17. கோயிற்கலை வளர்ச்சியில் பாண்டியர்களின் பங்களிப்பை விவரிக்க.
18. சங்க காலத்தில் கோயில்கள் எவ்வாறு கட்டப்பட்டன என்பதைத் தெளிவுபடுத்துக.
19. பதினொரு வகையான ஆடல்களை வகைப்படுத்தி விளக்குக.
20. கொங்கேழ் தலங்களுள் ஒன்றான அவிநாசித் தலத்தின் சிறப்புக்கள் குறித்து விவரிக்க.
21. திருவிழாக்களின் தத்துவத்தை ஆய்ந்தெழுதுக.

*********